# பருத்தித்துறை பிரதேச சபை

## யாழ்ப்பாண மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 20 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 மார்ச் 25 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய பருத்தித்துறை பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி பருத்தித்துறை பிரதேச சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்குகளுடன் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிசார் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானம், செலவினம் மற்றும் சொத்துக்கள் என சந்தர்ப்பங்கள் மற்றும் பெறுமதிகளின் கீழ் உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| | நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | | செலவினம் | | சொத்துக்கள | | பொறுப்புகள் | |
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா | | ரூபா | | ரூபா | | ரூபா |
| கணக்குகளில் அதிகரித்துக் காட்டல்கள் | 01 | 2,579 | 03 | 116,013 | - | | - | - |
| கணக்குகளில் வகைப்படுத்தல் வழுக்கள் | - | - | - | - | - | - | 01 | 13,700 |

## 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,426,108 ஆக இருந்தது.

## 1.3.4 கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாயைமால் ரூபா 2,377,723 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 1.3.5 இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது கீழே காட்டப்பட்ட சட்டங்கள். விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள். விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| **(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம்** | |
| 24 ஆம் பிரிவு | ஆண்டொன்றில் ரூபா 1,000 இற்கு மேல் மத ரீதியான மற்றும் பொது வேலைகளிற்காக செலவிடுகையில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது ரூபா 4,895 ஆனதோர் தொகை உபசாரச் செலவினத்திற்காக செலுத்தப்பட்டிருந்தது. |
| **(ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) ஒழுங்கு விதிகள்** | |
| (i) 05 ஆம் ஒழுங்குவிதி | சபையின் களஞ்சியம் மற்றும் நிதியினைக் கையாளும் சில உத்தியோகத்தர் களிடமிருந்து பிணைப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (i) 140 ஆம் ஒழுங்கு விதி | ரூபா 911,036 முற்பணத்தினை அறவிடுவதற்கு செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2009 ஜனவரி 20 ஆந் திகதிய பீரீ/01/2009 ஆம் இலகக்க வட மாகாண திறைசேரிச் சுற்றிக்கை | மேற்படி சுற்றறிக்கைக்கு முரணாக பொருள் மொய்மையாய்வுச் சபையின் அங்கத்தினர்களிற்கு ரூபா 2,100 மெய்மையாய்வுச் சபை படி செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 20,017,873 ஆக இருந்ததுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய

ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,737,482 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு முன்னைய ஆண்டின் பொருட்டு மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2010 | | | 2009 | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| வீதவரிகள் மற்றும் வரிகள் | 1,580 | 74 | 587 | 50 | 54 | 533 |
| குத்தகை வாடகை | 1,010 | 1,477 | 215 | 980 | 1,054 | 235 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணங்கள் | 153 | 197 | - | 1,650 | 110 | - |
| வேறு வருமானங்கள் | 22,182 | 29,465 | 10 | 19,061 | 1,557 | 12 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

பல்வேறு நியதிச் சட்டங்களின் கீழ் 2010 திசெம்பர் 31 வரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தினால் சேகரிக்கப்பட்டு பிரதம செயலாளரிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த ரூபா 4,399,409 நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 129(2)(ஆ) பிரிவின் படி அறவிடப்பட்ட முத்திரைக் கட்டணங்கள் சபையினால் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் பதிவாளர் நாயகத்தினால் முத்திரைக் கட்டணப் பட்டோலைகள் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

சபையின் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு உள்ளவாறான செலவினமும் உரிய விலகல்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| ஆளுக்குரிய வேதனம் | 15,550 | 9,049 | 6,501 | 15,800 | 8,944 | 6,856 |
| ஏனையவைகள் | 4,206 | 2,146 | 2,060 | 4,755 | 2,593 | 2,162 |
| உப மொத்தம் | 19,756 | 11,195 | 8,561 | 20,555 | 11,537 | 9,018 |
| **மூலதனச் செலவு** | 7,669 | 10,740 | (3,071) | 3,056 | 2,012 | 1,044 |
| முழு மொத்தம் | 27,425 | 21,935 | 5,490 | 23,611 | 13,549 | 10,062 |

### 2.4 அறவிடப்பட வேண்டிய வருமானம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) ஒழுங்குவிதிகளின் பிரகாரம் மீளாய்வாண்டுமற்றும் முன்னைய ஆணுடுகள் தொடர்பில் அறவிடப்பட வேண்டிய ரூபா 812,000 வாடகை, வீதவரிகள், அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும்

ஏனைய வருமானங்களை அறவீடு செய்வதற்கு 2010 திசெம்பர் 31 வரை தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### 2.5.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியனர் எண்ணிக்கை

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளபடியான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவி நிலை மட்டம் | 02 | 02 |
| இரண்டாம் மட்டம் | 13 | 13 |
| ஆரம்ப மட்டம் | 23 | 19 |
| ஏனையவர்கள் | - | 15 |
| | 38 | 49 |

## 2.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.6.1 பெறப்பட வேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 911,035 ஆக இருந்ததுடன் 1 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 11,150 ஆக இருந்தது.

### 2.6.2 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பதவியணிக் கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 2,144,063 ஆக இருந்ததுடன் அதில் 1 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 141,150 ஆகும்.

**2.7 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்**

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதயித் தொகையான ரூபா 345,666 நிதியங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் நீண்ட தாமதம் அவதானிக்கப்பட்டது.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பித்த திகதி | முடிவுறுத்த இலக்கிட்ட திகதி | 2010 திசெம்பர் 31 வரை செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | | | ரூபா. | |
| வீரகதி பிள்ளையார் கோயில் வீதி நிர்மாணம் | 985,219 | 2010.09.09 | 2010.12.31 | இல்லை | கொள்வனவு நடைமுறையில் தாமம் |
| தலைமை அலுவலக கட்டிட வேலைகள் | 434,113 | 2010.12.03 | 2010.12.31 | இல்லை | கொள்வனவு நடைமுறையில் தாமம் |

**2.9 முற்றாக கைவிடப்பட்டிருந்த செயற்திட்டங்கள்**

பின்வரும் செயற்திட்டங்கள் முற்றாக கைவிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பித்த திகதி | 2010 திசெம்பர் 31 வரை செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா. | | ரூபா. | |
| மந்திகை பொது கழிவறை நிர்மாணம் | 238,617 | 2010.10.05 | இல்லை | மூலப்பொருள்கள் கிடைக்காமை |

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) வாகனப் பாவனை

(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு